திருமதி த. ந. அனந்தநாயகி: இந்தக் காவேரி டெல்டாப் பகுதியை சீரமைப்புச் செய்ய எவ்வளவு ஆண்டுகளுக்கு முன் முயற்சி எடுக்கப்பட்டது? எவ்வளவு ஆண்டுக் காலம் ஆய்வில் இருந்தது? அது முடிவு அடைய எவ்வளவு ஆண்டுக் காலம் ஆகும் என்று தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: எனக்குத் தெரிந்தவரையில் 1968-69-ல் பரிசீலிக்கப்பட்டது. 1969-ல் இது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சில திட்டங்களைப் பொறுத்த வரையில் நம் அரசு நான்கு ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்ற ஏற்பாடு செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் ஏற்கனவே முடிந்து விட்டது. சிறிது நேரத்திற்குத்தான் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. நம்பிக்கை யில்லாத் தீர்மானம் வருகிறது. நாற்பது பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

பொன்னனியாறு திட்டம்

*74 வினு—திரு. பெ. செளந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், பொன்னனியாறு திட்ட வேலை எப்போது துவக்கப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) இதனுல் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 26—6—70 அன்று வேலை துவக்கப்பட்டது.

(இ) தற்போது வேலை துரிதமாக நடந்து கொண்டிருக்கிறது.

(உ) இதனுல் புதியதாகப் பாசன வசதி பெறும் நிலம் 1830 ஏக்கர். மேலும் தற்சமயம் பாசனத்தில் உள்ள 271 ஏக்கருக்கு நம்பகமான பாசன வசதி அளிக்கப்படும்.

திரு. பெ. செளந்தரபாண்டியன்: என் தொகுதியில் பஞ்சப்பட்டியில் ஒரு ஏரி இருக்கிறது. அதில் தண்ணீர் பஞ்சம் நிறைய இருக்கிறது. ஆகவே இதை சற்று நீட்டினுல் அந்த ஏரிக்கு தண்ணீர் வர வாய்ப்பிருக்கும். சில ஆயிரம் ஏக்கர்கள் விளை நிலமும் கிடைக்கும்.

1972 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள், பேச்சாக ஆரம்பித்துவிட்டீர்களே.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆகவே இந்தத் திட்டத்தை பஞ்சப் பட்டிக்கு நீட்டித்துத் தர அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஏற்கனவே அத்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் கருத்து சாத்தியமானதாக இருந்தால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

'அதிகாரி' கண்மாய்

* 75 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றிய எல்லைக்குள் உள்ள அதிகாரி கண்மாயினை மராமத்து செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஒப்ப அறிவிப்புகள் உறுதிப் படுத்தப்பெற்றபின், வேலை துவங்கப் பெறும்.

திரு. நா. வெ. குருசாமி : தற்சமயம் அந்தக் கண்மாயில் வேலை நடந்து கொண்டிருக்கிறது கடந்த ஒரு மாத காலமாக. ஆனால் அந்தக் கால்வாயை வெட்டும்போது சிலர் இடையூறு செய்கிறார்கள். அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்தக் கால்வாயை விரைவில் சீரமைக்க ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இடையூறுகள் நடைபெறாத அளவிற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தந்து நடவடிக்கைகள் எடுத்தால் அதிகாரிகள் விரைவாக நிறைவேற்றித் தருவார்கள்.

Aruppukottai Tank

* 76 Q.—THIRU SOWDI S. SUNDARA BHARATHI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any permission was given by Public Works Department authorities to cut open the bund of Aruppukottai